# ஒரு நிமிடம் உன் அருகினில் இருக்க

ஒரு நிமிடம் உன் அருகினில் இருக்கவருவாயோ என் இறைவா - 2
அந்தச் சிறு பொழுதே ஒரு யுகமாய் மாறும்அறிவாவோ என் தலைவா

**1)**
அளவில்லாத உன் அன்பினை நினைக்க அழுகை வருவதன்
நியாயமென்ன -2
தொழுதுன்னை வணங்கி கவலைகள் கூற சுமைகள் கரைந்திடும்

( மாயமென்ன 2 ) மாயமென்ன ஆகா.. (ஒரு நிமிடம்)

**2)**
சோதர மானிடர் அழுகுரல் கேட்க கேள்விகள் எழுவதும் ஏன் இறைவா - 2
வேதனை கண்டும் நீ காத்திடும் மௌனம் விளங்கவில்லை¡ அது

(ஏன் இறைவா- 2) ஏன் இறைவா ஆகா... (ஒரு நிமிடம்)

**3)**
விழிகளை மூடி உனை நினைக்கையிலே விந்தைகள் நிகழ்வதும் ஏன்
இறைவா-2
மொழியினைத் தாண்டி மனம் உறவாட மகிழ்வினில் மிதப்பதும்

(ஏன் இறைவா 2) ஏன் இறைவா ஆகா.. (ஒரு
நிமிடம்)